செய்தி வெளியீடு எண் :11 நாள் :16.11.2020

**தேனி மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்:-**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (16.11.2020) தேனி மாவட்டத்தில் உள்ள 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டு தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 01.01.2020-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, நடைபெற்ற வாக்காளர் பட்டியல் தொடர் திருத்தம் 2020-ன்படி, 14.02.2020 முதல் 31.10.2020 வரை நேரடியாகவும், இணையதளம் வாயிலாகவும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் (படிவம் -6), நீக்கல் (படிவம் -7), திருத்தம் (படிவம் -8), ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம்(8A), ஆகியவற்றிற்காக பெறப்பட்ட மொத்த 11,184 மனுக்களின் அடிப்படையில் 9,106 மனுக்கள் ஏற்கப்பட்டும், 2,078 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டும் உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மாவட்டத்தில் 01.01.2020-ஐ தகுதி நாளாகக் கொண்டு 198-ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் 1,33,659 ஆண் வாக்காளர்களும், 1,36,149 பெண் வாக்காளர்களும், 25 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,69,833 வாக்காளர்களும், 199-பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 1,35,225 ஆண் வாக்காளர்களும், 1,39,667 பெண் வாக்காளர்களும், 98 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,74,990 வாக்காளர்களும், 200-போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் 1,32,584 ஆண் வாக்காளர்களும், 1,37,208 பெண் வாக்காளர்களும், 18 இதர வாக்காளர்களும் என மொத்தம் 2,69,810 வாக்காளர்களும் உள்ளனர்.

மேலும், 201-கம்பம் சட்டமன்ற தொகுதியில் 1,36,520 ஆண் வாக்காளர்களும், 1,42,305 பெண் வாக்காளர்களும், 31 இதர வாக்காளர்களும், என மொத்தம் 2,78,856 வாக்காளர்களும் என ஆக மொத்தம் மாவட்டத்தில் 5,37,988 ஆண் வாக்காளர்களும், 5,55,329 பெண் வாக்காளர்களும், 172 இதர வாக்காளர்களும், என மொத்தம் 10,93,489 வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று உள்ளனர்.

இன்று வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்கள், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகம் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கம் / நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். மேற்கண்ட இடங்களில் பொதுமக்கள் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சரியான விபரத்துடன் இடம் பெற்றுள்ளதா என உறுதி செய்து கொள்ளலாம்.

மேலும், 01.01.2021-ஆம் தேதியினை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு 18 வயது பூர்த்தி அடைந்த தகுதியுள்ள வாக்காளர் அனைவரும் 16.11.2020 முதல் 15.12.2020 வரை அனைத்து வேலைநாட்களிலும், சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் சார் ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வட்டாட்சியர்/நகராட்சி ஆணையர் ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம்.

அல்லது சிறப்பு முகாம் நாட்களான **21.11.2020, 22.11.2020, 12.12.2020 மற்றும் 13.12.2020** ஆகிய தேதிகளில் **காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும்** நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் (படிவம் -6), நீக்கல் (படிவம் -7) திருத்தம் (படிவம் -8), ஒரே தொகுதிக்குள் முகவரி மாற்றம்(8A) மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது www.nvsp.in என்ற இணையதள முகவரி வாயிலாகவும் விண்ணப்பித்து பயனடையலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) மா.சிவசுப்பிரமணியன், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) ரா.நிறைமதி, வட்டாட்சியர் (தேர்தல்) ஆர்த்தி, மற்றும் எஸ்.பி.எம்.சையதுகான் (அ.இ.அ.தி.மு.க.), வீனஸ் கண்ணன் (தி.மு.க), எம்.எஸ்.சுப்ராயர் (இந்திய தேசிய காங்கிரஸ்) கே.ஜ.எம்.ஹக்கீம் (அ.இ.தி.காங்கிரஸ்), டி.வெங்கடேசன் (இ.கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**